ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1922/4 - 2015 ජූලි මස 07 වැනි අඟහරුවාදා - 2015.07.07

*1922/4 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைகள் சட்டம்***

*6 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

**சேவை வழங்குநர்களை நியமித்தல்**

*றெஜினோல்ட் குரே ஆகிய நான், விமான சேவைகள் அமைச்சராக, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இங்கு I - ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின், வரையறைகளின் பிரகாரம், வ/விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) கம்பனி (மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நியதிச்சட்ட சேவைகளை வழங்குநர்) இங்கு பின்வரும் II ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அம்பாந்தோட்டை, மத்தளை, மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பின்வரும் வானோடல் சேவைகளை வழங்குவதற்காக சேவை வழங்குநராக இன்று முதல் நடைமுறையிலுள்ளவாறு இத்தால் நியமிக்கின்றேன்.*

*(அ) நில கையாளுகை வசதிகள் மற்றும் சேவை வழங்குதல் ;*

*(ஆ) விமானங்களின் சுத்திகரிப்பு சேவை உட்பட, ஏற்றிடத்திலுள்ள விமானங்களை அனுப்புவதற்குத் தேவையான உதவி அல்லது உபகரணங்களை வழங்குதல்.*

*றெஜினோல்ட் குரே,*
*விமான சேவைகள் அமைச்சர்.*

*பத்தரமுல்லை,*
*2015, யூன் 25.*

***அட்டவணை*** I

*நியமிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்*

*1. இங்கு II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கும்போது சேவை வழங்குநர், உரியவாறு 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைகள் சட்டத்தின் மற்றும் அதன் கீழ் அமுல்படுத்தப்படும் விதிகள், விதிமுறைகள் மற்றும் நடைமுறைப்படுத்தும் தரங்களுக்கு ஏதேனுமொன்றில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டமொன்றின் கீழ் அல்லது உட்படுத்தப்படுகின்ற, உரிய சட்ட ஒதுக்கீடுகளுக்கு இயைவாக செயலாற்றுதல் வேண்டும்.*

2. சேவை வழங்குநரினால், அவ்வப்போது அமைச்சரினால் அல்லது சிவில் விமான சேவைகள் அதிகார சபையால் அல்லது சேவை வழங்குநரின் கடமைகள், பணிகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவது தொடர்பாக உடனுக்குடன் வழங்கப்படுகின்ற பொது கட்டளைகள் அல்லது விசேட கட்டளைகள் அல்லது ஏதேனுமொன்றுக்கு இயைவாக செயற்படுதல் வேண்டும்.

3. சேவை வழங்குநர் வான் போக்குவரத்து கைத்தொழில்துறையில் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக நியதிச்சட்ட சேவை வழங்குநரால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள அசைவனவும், அசையாதனவுமான சொத்துக்கள் அனைத்தும் சிறந்த முறையில் பேணப்பட வேண்டியதுடன், அவ்வாறான அசைவனவும், அசையாதனவுமான சொத்துக்கள் ஏதேனும் மூன்றாம் தரப்பினருக்கு குத்தகையிற்கு விடுதல் கூடாது.

4. இந்த நிபந்தனையின் கீழ் சேவை வழங்குநரால் வழங்கப்படுகின்ற வசதிகள் அல்லது ஏதேனும் சேவைத் தொடர்பாக, இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியின் பின்னர் சேவை வழங்குநரால் கைச்சாத்திடப்படுகின்ற சகல ஒப்பந்தங்களிலும் சேவை வழங்குநரினால், அவருக்காகவே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தமாகவே கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், குடியரசுக்காக கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளாக கருதக் கூடாது. அவ்வாறான ஒப்பந்தக்காரர் தொடர்பாக எவ்வகையிலான பொறுப்பும் குடியரசிற்கு கையளித்தல் கூடாது.

5. சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் செயலாளர் அல்லது சிவில் விமான சேவைகள் அதிகார சபை அல்லது சேவை வழங்குநருக்கு எழுத்துமூலம் நியமித்த சந்தர்ப்பத்தில், சேவை வழங்குநர் இந்த நியமனத்தின் கீழ் வழங்குகின்ற ஏதேனும் வசதிக்கு அல்லது சேவைக்குரிய நிர்வாக தொழிற்பாடு, தொழில்நுட்பம் அல்லது நிதிநிலைக் காரணிகள் தொடர்பாக அனைத்து உரிய தகவல்கள் சூழலுக்கேற்றவாறு அக்குறித்த செயலாளருக்கு அல்லது சிவில் விமான சேவைகள் அதிகார சபையிற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

6. சேவை வழங்குநர், குறித்த சர்வதேச தரங்களுக்கு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வழக்கங்களுக்கமைய அல்லது சூழலுக்கேற்ப சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது ஏதேனும் தேவைப்பாடுகளுக்கு அல்லது இயைவான முறையிலான வசதிகள் மற்றும்/அல்லது சேவைகளை வழங்குதல் தொடர்ந்தும் கொண்டு செலுத்துவதனை உறுதிப்படுத்தி இங்கு II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வானோடல் சேவைகளை வழங்குவதற்காக சூழலுக்கேற்ப சிவில் விமான சேவைகள் அதிகார சபையால் அல்லது சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் அல்லது நியமிக்கப்படும் தேவைப்பாடுகளுக்கமைய செயலாற்றி உரியவாறு தேவையான அனுமதிப்பத்திரங்கள் அல்லது சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

7. சேவை வழங்குநர், இந்த நியமிப்பினால் அதிகாரம் வழங்கப்பட்ட வானோடல் சேவைகளை வழங்குவதற்காக பிரயோகிக்கப்படும் அலுவலர்கள், சாதனங்கள், தொழிற்கருவிகள், வாய்ப்பு நலன்கள், சேவைகள் மற்றும் நடைமுறைமைகளுக்குத் தேவையான சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்படுகின்ற உரிமம், வீத அறுதிப்பாடு, இசைவளி, அங்கீகாரம் அல்லது அதிகாரமளிப்பு அல்லது தேவையானபோது அந்தந்த முறையில் பெற்றிருப்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

8. உரியவாறு தேவையான உரிமம் அல்லது சான்றிதழ் அல்லது பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கொண்டு செலுத்துவதற்காக சிவில் விமான சேவைகள் அதிகாரசபையிற்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் சேவை வழங்குநரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

9. சேவை வழங்குநர் அமைச்சரினால் பெற்றுக்கொண்ட எழுத்தாலான அங்கீகாரமின்றி II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எதுவித சேவை வழங்குவதனை மாற்றம் செய்தல், இடைநிறுத்துதல் அல்லது நிறுத்துதல் கூடாது.

10. சேவை வழங்குநரின் தொழிற்பாட்டின்போது, எழக்கூடிய உள்ளார்ந்த பொறுப்புக்கள், நஷ்டஈடு செலுத்துதல் அல்லது நிறைவேற்றுவதற்காக சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் திருப்திபடும் வகையிலான போதுமான காப்புறுதி காப்பீடொன்று ஆயத்தப்படுத்துவது சேவை வழங்குநரின் பொறுப்பாக அமைவதுடன், அவ்வாறான பொறுப்புகள் அல்லது நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக கடமை அரசாங்கத்தின் மீது கையளிக்கப்பட மாட்டாது.

11. விமான சேவைகள் உத்தரவாதம், பாதுகாப்பு, வேளை ஒழுங்கு, வினைத்திறன் அல்லது நாட்டின் வான் போக்குவரத்து தொழிற்பாடுகளில் சிக்கணம் கடைப்பிடிப்பது தொடர்பாக அவ்வாறான நடவடிக்கையெடுத்தல் தேவையென கருதும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் அல்லது சேவை வழங்குநர்களின் அதற்காக வேண்டுகோள் கிடைத்த சந்தர்ப்பத்தில் அல்லது இந்த நிபந்தனையின் மூலம் செய்யப்பட்ட சேவை வழங்குநர் நியமனம் இரத்துச் செய்யும் உரிமை அமைச்சரால் தங்கள் மீது வைத்துக்கொள்ளப்படும்.

12. கூட்டாண்மை வேறன்மை, பங்கு மூலதனம் அல்லது சேவை வழங்குநரின் பெயர் மாற்றுவதற்காக அமைச்சரிடம் எழுத்திலான பெற்றுக் கொண்ட முன் அங்கீகாரம் தேவைப்படும்.

*13. அமைச்சரினால் பெற்றுக்கொண்ட எழுத்தாலான அங்கீகாரமின்றி, சேவை வழங்குநர் II ஆம் அட்டவணையில் குறிப்பிட்ட வசதிகள் அல்லது சேவை ஏதும் வழங்குதல் வேறொருவருக்கு கைமாற்றுவதற்கு அல்லது குத்தகையிற்கு விடுதல் அல்லது மேற்கொள்ளக்கூடாது ;*

**அட்டவணை II**

*நியதிச்சட்ட சேவை வங்குநரினால் வழங்குவதற்குள்ள வசதிகள் மற்றும் சேவைகள்*

(அ) நிலத் தொழிற்பாட்டு வசதிகள் அல்லது சேவைகளின் விபரம் பின்வரும் வசதிகள் அல்லது சேவையொன்று அல்லது அதற்கு மேற்பட்டளவு உள்ளடக்கப்பட்ட நில கையாளுகை வசதிகள் அல்லது சேவை வழங்குதல் ;

***அகவரிசை வசதிகள்/சேவை விபரம்*** :

1. சிறந்த நிர்வாகம் மற்றும் மேற்பார்வை :

பின்வரும் நடவடிக்கைகளில் ஒன்று அல்லது மேற்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

(அ) இயக்குநர் பிரதிநிதித்துவம் ;

(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் வேறு அமைப்புக்களுடனான ஒருங்கிணைப்பு சேவைகள்;

(இ) அதன் பிரதிநிதிகளுக்கு அலுவலக இடவசதிகளை வழங்குதல் ;

(ஈ) சுமைக் கட்டுப்பாடு, செய்தி மற்றும் தொலைத்தொடர்பு ;

(உ) அலகு சுமை சாதனம், களஞ்சியப்படுத்துதல் மற்றும் நிர்வாகம் ;

(ஊ) சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கும் விதத்திற்கு தொழிற்பாட்டாளரின் விமானங்கள், கப்பற்சரக்குகள் மற்றும் அலுவலக வளாகத்துடன் தொடர்புடைய உத்தரவாத பறத்தல் மேற்பார்வை செய்தல் ;

(எ) தொழிற்பாட்டாளருக்காக மற்றும் அவர் சார்பாக பறத்தலுக்கு முன், பறக்கும் நேரத்தில் அல்லது பறத்தலுக்குப் பின் செய்யும் வேறு ஏதேனும் மேற்பார்வை நடவடிக்கைகள்.

2. பயணிகள் தொழிற்பாடு:

(அ) நெருங்கும், புறப்படும் மாறும் அல்லது இடைநிற் பயணிகளுக்குத் தேவையான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் பயண ஆவணங்கள் சரி பிழை பார்த்தல், பயணப் பொதிகளை பட்டியல்படுத்துதல் மற்றும் தேர்ந்தெடுக்கும் பிரதேசத்திற்கு கொண்டு செல்லுதல் உட்பட ஏதேனும் விதத்தில் உதவுதல் ;

(ஆ) பயணிகளுக்கு மற்றும் விமான நிலையத்தை உபயோகிப்பவர்களுக்கு ஓய்வு அறை வசதிகளை வழங்குதல் மற்றும் பயணிகள் தொழிற்பாட்டிற்கு தொடர்பான அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட அல்லது வேறு நடவடிக்கைகள் ஏதும்.

3. பயணப் பொதிகள் கையாளுகை :

பின்வரும் நடவடிக்கைகளில் ஒன்று அல்லது அதிகளவு அல்லது நிறைவேற்றுவதற்கு.-

(அ) தேர்ந்தெடுக்கும் பிரதேசத்திற்குள் பயணப் பொதிகளின் தொழிற்பாடு ;

(ஆ) புறப்படுவதற்காக பயணப் பொதிகளின் தெரிவு ;

(இ) பயணப்பொதிகள் விமானத்திலிருந்து தேர்ந்தெடுக்கும் பிரதேசம் வரையும் தேர்ந்தெடுக்கும் பிரதேசத்திலிருந்து விமானம் வரையும் போக்குவரத்து செய்வதற்காக ஈடுபடுத்தியுள்ள சாதனங்களுக்கு பயணப் பொதிகளை ஏற்றி இறக்குதல் ;

(ஈ) பயணப் பொதிகள் தேர்ந்தெடுக்கும் பிரதேசத்திலிருந்து பயணிகளால் திரும்ப பெற்றுக்கொள்ளும் பிரதேசம் வரை போக்குவரத்து செய்தல் மற்றும் பயணப் பொதிகளின் தொழிற்பாட்டுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இணைக்கப்பட்ட வேறு நடவடிக்கைகள் ஏதும்.

4. வான் சரக்குகள் மற்றும் தபால் தொழிற்பாடுகள்;

பின்வரும் நடவடிக்கைகளில் ஒன்று அல்லது அதிகளவு அல்லது நிறைவேற்றுவதற்கு-

**வான் சரக்குகள்** :

(அ) ஏற்றுமதி மாற்றுதல் மற்றும் இறக்குமதி வான்சரக்குகள் தொடர்பாக பௌதீக கையாளுகை ;

(ஆ) அதனுடன் தொடர்புடைய பத்திரங்கள் தொடர்பில் செயலாற்றுதல் ;

(இ) சுங்க நடைமுறைமைகள் ;

(ஈ) அபாயகரமான பொருட்களின் கையாளுகை ;

(உ) சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்படும் பாதுகாப்பு ஒழுங்குமுறை நடைமுறைப்படுத்துதல் அல்லது விமானச் சரக்குத் தொழிற்பாட்டுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இணைக்கப்பட்ட அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகளுக்காக.

**தபால்** :

(அ) கிடைக்கும் மற்றும் அனுப்பும் தபால் தொடர்பான பௌதீக கையாளுகை ;

(ஆ) அதனுடன் தொடர்புடைய பத்திரங்கள் தொடர்பில் செயலாற்றுதல் ;

(இ) சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்படும் பாதுகாப்பு ஒழுங்குமுறை நடைமுறைப்படுத்துதல் அல்லது தபால் தொழிற்பாட்டுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இணைக்கப்பட்ட அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகளுக்காக.

5. ராம்ப் கையாளுகை-

பின்வரும் நடவடிக்கைகளில் ஒன்று அல்லது அதிகளவு அல்லது நிறைவேற்றுவதற்கு

(அ) வரும்போது மற்றும் புறப்படும்போது தரையின் மீதுள்ள விமானங்களைக் கையாளுதல் ;

(ஆ) விமானங்களை நிறுத்துவதற்கு உதவுதல் மற்றும் பொருத்தமான கருவிகளை வழங்குதல் ;

(இ) விமானங்கள் மற்றும் விமான பிரதேசங்கள் சேவை வழங்குநரிடையே தொடர்பாடல் ;

(ஈ) விமானத்துக்கு ஏற்றுதல் மற்றும் இறக்குதல் ;

(உ) விமானங்களின் பணியாள்கள் மற்றும் அவர்களின் பயணப் பொதிகள் விமானத்திற்கு மற்றும் முனையத்திற்கிடையே போக்குவரத்து செய்தல் ;

(ஊ) உந்துப்பொறி தொடக்க நிலையிற்காக பொருத்தமான அலகுகளின் முன்னேற்பாடு மற்றும் இயங்குமுறை ;

(எ) விமானங்களை இழுத்தல் மற்றும் இழுப்பதற்கான சாதனங்களின் முன்னேற்பாடு மற்றும் இயங்குமுறை ;

(ஏ) உணவுபானங்களின் போக்குவரத்து, ஏற்றுதல் மற்றும் இறக்குதல் அல்லது ராம்ப் கையாளுகையிற்கு இடைநேரான அல்லது அதற்கு இணைக்கப்பட்ட அல்லது ஏனைய பருப்பொருள் ஏதும்.

(ஆ) விமானங்களின் சுத்திகரிப்பு உட்பட, ஏற்றிடத்தின் மீதுள்ள விமானங்களை அனுப்புவதற்காக தேவையான உதவி அல்லது உபகரணங்கள் அல்லது வழங்குதல்.

விமானங்களின் சுத்திகரிப்பு சேவைகள் உட்பட, ஏற்றிடத்திலுள்ள விமானங்களை அனுப்புவதற்காக தேவையான உதவி அல்லது கருவிகள் அல்லது வழங்கும் செயலுக்கு பின்வரும் செயல்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டளவு அல்லது உள்ளடக்கப்படும்.

1. **விமானங்களுடன் தொடர்புடைய சேவைகள்** :

விமானம் மற்றும் மலசலக்கூடத்திற்குள்ளே மற்றும் வெளியே சுத்திகரிப்பு மற்றும் நீர் விநியோகிக்கும் சேவைகள் மற்றும் விமான சேவை சேவைகளுக்கு தொடர்படுகின்ற அல்லது அதற்கு இணைக்கப்பட்ட அல்லது ஏதேனும் காரணங்களுக்காக.

2. **விமானங்களின் பராமரிப்பு** :

பின்வரும் சேவைகளில் ஒன்று அல்லது மேற்பட்ட அல்லது நிறைவேற்றுவதற்கு :-

(அ) பறப்பதற்கு முன்னர் வழக்கத்தின் பிரகாரம் செய்யப்படும் சேவைகள் ;

(ஆ) வழக்கத்துக்கு அல்லாத சேவைகள் ;

(இ) உதிரிப்பாகங்கள் மற்றும் பொருத்தமான கருவிகள் முன்னேற்பாடு மற்றும் நிர்வாகம் ;

(ஈ) பொருத்தமான தரிப்பிடம்/அல்லது விமானங்கள் நிறுத்துமிடத்திற்கு இடவசதிகளை வேறாக்குவதற்காக கிடைக்கும் வேண்டுகோள் மற்றும் விமானங்களை பராமரிப்பது தொடர்பாக அல்லது அதற்கு இணைக்கப்பட்ட அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக.

3. **பறத்தல் இயங்குமுறை மற்றும் பணிக்குழு நிர்வாகம்**:

பின்வரும் நடவடிக்கைகளில் ஒன்று அல்லது அதிகளவு அல்லது நிறைவேற்றுவதற்கு -

(அ) புறப்படும் விமான நிலையத்தில் அல்லது வேறு ஏதேனும் விமான நிலையத்தில் அல்லது பறத்தல்களை தயார்படுத்துதல் ;

(ஆ) தேவையேற்படின் மீள - அனுப்புதல் உட்பட பறக்கும்போது உதவுதல் ;

(இ) பறத்தலின் பின்னரான நடவடிக்கைகள் ;

(ஈ) பணிக்குழு நிர்வாகம் அல்லது பறத்தல் இயக்குநர்களின் பறத்தல் தொழிற்பாடுகள் மற்றும் பணிக்குழுவுடன் தொடர்புடைய அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட அல்லது வேறு நடவடிக்கைகள்.

4. **மேற்பரப்பு போக்குவரத்து** :

வான் பிரதேசத்திற்குள் அல்லது அதற்கு வெளியே போக்குவரத்து சேவைகளை வழங்குதல் தேவையேற்படும் போது பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அளவு ஏற்படுத்துதல்.

(அ) பணிக்குழு, அவர்களின் பயணப்பொதி, கப்பற்சரக்குள் மற்றும் தபால் முனையம் மற்றும் விமானத்திற்கிடையே போக்குவரத்து செய்வதனை ஒழுங்கமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ;

(ஆ) நிறுத்தும்போது தேவைப்படும் வேறு (வழக்கமல்லாத) விசேட போக்குவரத்து நடவடிக்கைகள் அல்லது விமானங்களை பாவனை செய்வோருக்குரிய மேற்பரப்பு போக்குவரத்துடன் தொடர்புடைய அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட அல்லது வேறு நடவடிக்கைகள் ஏதும்.

7 - 1023